OUR SG HERITAGE








# நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டம்

## நிர்வாகச் சுருக்கம்














2016ம் ஆண்டில் தீவளாவிய மரபுடைமை நிகழ்ச்சிகள்  மற்றும் நடவடிக்கைகளில் 6.47மில்லியன் பேர் கலந்துகொண்டனர்.

2016ல் கலைக்கும் கலாசாரத்திற்கும் $74.3மில்லியன் அளிக்கப்பட்டது







சமூக ஊக்குவிப்பாலும் மரபுடைமை மானியங்களின் ஆதரவாலும் 290க்கும் மேற்பட்ட மரபுடைமை திட்டநடவடிக்கைகள் நடத்தப்பட்டன




2016ல் அரும்பொருளகத்திற்கும் கலை மற்றும் மரபுடைமை அமைப்புகளுக்கும் 8.36 மில்லியன் வருகையாளர்கள் வருகையளித்தனர்

மரபுடைமை இணைய வாசலுக்கு “roots.sg” 2 மில்லியன் வருகையாளர்கள்



# சிங்கப்பூரில், நம்முடைய மரபுடைமை நம்மைச் சுற்றிலும் காணப்படுகிறது.

National Heritage Board




சிங்கப்பூரில், நம்முடைய மரபுடைமை நம்மைச் சுற்றிலும் காணப்படுகிறது, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், இடங்கள், அரும்பொருளகங்கள் போன்ற இடங்களிலும், கலைப்படைப்புகள், கலைப்பொருட்கள் போன்ற பொருட்களிலும், விழாக்காலக் கொண்டாட்டங்கள், பாரம்பரிய கைவினைக் கலைகள், உணவு வகைகள் போன்ற பழக்கங்களிலும் மரபுடைமை புதைந்துள்ளது.

சிங்கப்பூரின் வளமான வரலாறும் பன்மயக் கலாசார மரபுடைமையும் நம் நாட்டின் சிறப்புக் கூறுகளாகவும், சிங்கப்பூரர்கள் என்ற நமது அடையாளமாகவும் விளங்குகின்றன. நம்முடைய மரபுடைமை நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்றவை, இன்று நம் வாழ்க்கையில் ஊக்கமாகத் திகழ்பவை, நாம் போற்றிப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைகளுக்குச் சொல்லித் தரவேண்டியவை.

நமது கடந்தகாலத்திலிருந்து நமக்கு விட்டுச் செல்லப்பட்ட நம்முடைய ஞாபகங்கள், அனுபவங்கள், கலைப்பொருட்கள், பாரம்பரியங்கள் அனைத்தும் மொத்தமாக உள்ளடங்கியதே மரபுடைமை. தனிப்பட்ட அடிப்படையில், நாம் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதை நிர்ணயிக்க மரபுடைமை பங்களிக்கிறது.

ஒட்டுமொத்த அடிப்படையில், பலதரப்பட்ட பின்னணிகளைச் சேர்ந்த பல்வேறு வகையான மக்களை மரபுடைமை ஒன்றுபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பொதுவான அனுபவங்களின் மூலம் குடும்பங்கள், மூத்தோர்கள், இளையர்கள், புதிய குடிமக்கள் ஆகியோரை ஒன்றுசேர்க்கிறது. நாம் எப்படி ஒரே தேசமாகவும் ஒரே மக்களாகவும் உருவெடுத்தோம் என்பதை மரபுடைமை விளக்குகிறது. இவ்வாறாக, நமது நாட்டு நிர்மாண முயற்சிக்கான கூறுகளை மரபுடைமை வழங்கி, இக்கட்டான காலங்களில் நம்மை ஐக்கியப்படுத்துகிறது. நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கமுடியும் என்பதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்து, நம்மைச் சுற்றிலும் உலகம் மாறுகையில், அதற்கேற்ப நாமும் மாற்றியமைத்துக் கொண்டு முன்னேற்றமடைய உதவுகிறது.

# நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டம்

**“நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டம்” என்பது சிங்கப்பூரின் மரபுடைமை, அரும்பொருளகத் துறையின் எதிர்காலத்திற்கான முதல் பெருந்திட்டமாகும்.**


நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் என்பது சிங்கப்பூரின் மரபுடைமை, அரும்பொருளகத் துறையின் எதிர்காலத்திற்கான முதல் பெருந்திட்டமாகும். இத்திட்டம் 2018 முதல் 2022 வரையிலும் அதற்கு அப்பாலும் துறைக்கான பரந்த உத்திகளையும் முனைப்புகளையும் எடுத்துரைக்கிறது. துறையின் தற்போதைய சாதனைகளையும் வளர்ச்சியையும் திட்டம் கருத்தில் கொண்டுள்ளது.

மரபுடைமையிலும் அரும்பொருளகங்களிலும் சிங்கப்பூரர்களின் ஆர்வம் வளர்ந்து வருவதாலும், நம்முடைய மரபுடைமையைப் பாதுகாத்துப் பரப்புவதில் ஈடுபாட்டுடன் பங்குபெற விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. உலகமயமாக்கலின் காரணமாக நம்முடைய சமூக, பொருளியல் சூழலில் துரித மாற்றங்கள் நிகழ்வதால், மரபுடைமையைப் பாதுகாப்பதில் எழுந்துள்ள சவால்களைக் கையாளவும் திட்டம் வகுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், நம்முடைய மரபுடைமையிலும் சிங்கப்பூரர் என்ற அடையாளத்திலும் பெருமையை வளர்க்கவும், மேன்மேலும் ஒற்றுமையான, மீள்திறன்மிக்கச் சமுதாயத்தை உருவாக்கவும், சிங்கப்பூரின் மரபுடைமை தொடர்ந்து மதிக்கப்பட்டு, எதிர்காலத் தலைமுறையினரால் தொடர்ந்து போற்றிக் காக்கப்படும் வகையில் பாதுகாப்பு பரப்பவும் முடியுமென நம்புகிறோம்.



# நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டத்தின் இலக்குகள்:



## 01

மரபுடைமையின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் குறிப்பாக சமூகங்களை இணைக்கவும் அடையாள உடைமை உணர்வை வலுப்படுத்தவும் , நமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் மரபுடைமை ஆற்றும் பங்கை சிங்கப்பூரர்களிடம் தெளிவாக எடுத்துரைத்தல்

## 02

கடந்த சில ஆண்டுகளில் நாம் மேற்கொண்ட மரபுடைமை முயற்சிகளைப் பரிசீலித்து, செய்து முடித்த நல்ல காரியங்களை எடுத்துக்காட்டி, கவனிக்கப்படவேண்டியவற்றை கவனத்தில் கொள்ளுதல்






## 03

எதிர்காலத்திற்கான எங்களின் திட்டங்களைப் பகிர்ந்து கொண்டு, எடுக்கப்படும் முயற்சிகளைப் பற்றியும் அந்த முயற்சிகளில் எப்படி ஈடுபாடு கொள்வது என்பது பற்றியும் மக்களுக்குத் தெரியப்படுத்துதல்

# ஒன்றுசேர்ந்து உருவாக்கப்பட்ட திட்டம்

நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டத்தை உருவாக்குகையில், தேசிய மரபுடைமை கழகம் 30க்கும் மேலான குழு கலந்துரையாடல் அங்கங்களுக்கு ஏற்பாடு செய்து, 730க்கும் மேலான பங்கேற்பாளர்களைக் கலந்தாலோசித்தது. பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களில் மரபுடைமை வல்லுநர்கள், அரசாங்கச் சார்பற்ற அமைப்புகளின் உறுப்பினர்கள், கல்வியாளர்கள், மரபுடைமையைக் கட்டிக்காப்பவர்கள், அரும்பொருளகத்திற்குச் செல்பவர்கள், தொண்டூழியர்கள், ஆசிரியர்கள், இளையர்கள், மாணவர்கள் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். எங்களுக்குக் கிடைத்த கருத்துகள் மரபுடைமை உத்திகளை வகுப்பதற்கு முக்கியமாகப் பயன்பட்டன. அதோடு, அடுத்த சில ஆண்டுகளில் நாங்கள் எந்தெந்த அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அடையாளம் காணவும் உதவின.




குழு கலந்துரையாடல் அங்கங்களுக்குப் பிறகு, பொதுமக்களிடமிருந்து கருத்துகள் சேகரித்தோம். இதற்கென 2017 டிசம்பர் மாதம் இணையத்தளம் (Oursgheritage.sg) அமைத்து, ஒரு கண்காட்சியையும் நடத்தினோம். அக்கண்காட்சி 2018 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சிங்கப்பூர் முழுவதும் பயணம் சென்றது. மொத்தம் 34,000 பேர் கண்காட்சியையும் இணையத்தளத்தையும் பார்வையிட்டனர். இவர்களில் 7,300க்கும் மேலானோர் கருத்துகள் தெரிவித்தனர். இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள தொலைநோக்கையும் உத்திகளையும் வகுப்பதற்கு இக்கருத்துகள் உதவின.



குறிப்பிட்ட அக்கறைக்குள்ள விஷயங்களைக் கூடிப்பேசும் 30க்கும் மேலான குழு நிகழ்ச்சிகளில் 730கும் மேற்பட்டோர் பங்குபெற்றனர்




கண்காட்சிக்கும் இணையத்தளத்திற்கும் 34.000 மேற்பட்டோர் வருகையளித்தனர்



7,300 மேற்பட்டோர் தங்களின் கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களை வழங்கினர்.

# நாங்கள் அடைய விரும்பும் இலக்கு

## எங்களின் தொலைநோக்கு:

நமது வளமான, பல கலாசார மரபுடைமை சிங்கப்பூரர் என்ற அடையாளத்தின் நங்கூரமாகத் திகழ்கிறது.

நம்முடைய மரபுடைமையை மதித்து, அதில் ஈடுபாடு காட்டும் பிணைப்புமிக்கச் சமுதாயத்தை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம்.

இதுவே நம் நாட்டிலும் உலகுடனான நமது தொடர்புகளிலும் நம்மை பெருமை கொள்ளச் செய்து, எதிர்காலத்திற்கு நம்மைத் தன்னம்பிக்கையுடன் இட்டுச் செல்கிறது.



## நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டத்தின் தொலைநோக்கு நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்ட முனைப்புகளின் மூலம் அடையப்படும்:

### நம்முடைய இடங்கள்

நாம் வாழும், வேலை செய்யும், பொழுதுபோக்கும் நம்முடைய இடங்களில் நமக்குப் பொதுவான பல ஞாபகங்கள் இருக்கும். நமது கதைகளை எதிர்காலத் தலைமுறைகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் அவற்றை நாம் பத்திரமாகக் காக்கவேண்டும்.

அன்றாட இடங்களிலுள்ள மரபுடைமையை எடுத்துக்காட்டுவதன்மூலம், நமது கடந்தகாலத்தைப் பற்றிய எண்ணத்தையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை நாங்கள் ஆராய்வோம். சிங்கப்பூரில் இடப் பற்றாக்குறையும் மற்ற தேவைகளும் இருப்பதைக் கவனத்தில் கொண்டு, இந்த இடங்களின் வரலாற்றையும் ஞாபகங்களையும் தக்க வைப்பதற்கான வழிகளையும் நாங்கள் கண்டுபிடிப்போம்.

### நம்முடைய கலாசாரங்கள்

பல கலாசார சிங்கப்பூரின் அடிப்படைக் கூறுகள் நமது பாரம்பரியங்களும் வாழ்க்கை முறையும் தான். இவை என்றென்றும் நீடித்து நிலைக்கும் வகையில் இவற்றை நாம் போற்றிக் காக்கவேண்டும்.

பாரம்பரியங்கள், சடங்குகள், கைவினைக்கலைகள், வெளிப்பாடுகள், அறிவாற்றல், திறன்கள் ஆகியவை உள்ளடங்கும் நமது கண்கூடற்ற கலாசார மரபுடைமையைப் பாதுகாத்து பரப்பும் முனைப்புகளை நாங்கள் அறிமுகப்படுத்துவோம். நமது கண்கூடற்ற கலாசார மரபுடைமை காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து வளர வழிவிடும் அதே வேளையில், அதனை ஆவணப்படுத்தி, அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்ல துணை புரிவோம்.

### நம்முடைய பொக்கிஷங்கள்

நம்முடைய அரும்பொருளகங்களும் அவற்றின் திரட்டுகளும் சிங்கப்பூரின், ஆசியாவின், உலகின் கதையை எடுத்துச்சொல்லி, நம்மையும் நாம் வாழும் உலகையும் பற்றி மேலும் விவரமறிய நமக்குத் துணை புரிகின்றன.

நாங்கள் பல்வேறு சமூகங்களையும் ஈடுபடுத்தும் திட்டங்களை வகுப்பதன்மூலம், இந்த அரிய கலைப்பொருட்களும் அரும்பொருளகங்களும் அனைவரையும் அதிகமாகச் சென்றடைய முயற்சி எடுப்போம். சிங்கப்பூரின் வளமான புதைபொருள் மரபுடைமையைப் பாதுகாக்கவும் மேம்பட்ட வழிகளைக் கண்டறிவோம்.

### நம்முடைய சமூகங்கள்

நம்மைப் பிணைக்கும் மரபுடைமை நமக்குப் பொதுவானவை. அதனை வடிவமைப்பதில் நாம் ஒவ்வொருவரும் பங்காற்ற முடியும்.

சமூகங்கள், மரபுடைமை அமைப்புகள், தொண்டூழியர்கள் ஆகியவற்றுடனான பங்காளித்துவத்தை நாங்கள் வலுப்படுத்தி, சிங்கப்பூரின் மரபுடைமைக்கு அதிகமானோர் உரிமையேற்க ஊக்கமளிப்போம். எங்களின் பங்காளர்களுக்குப் பொறுப்பளிக்க புதிய வழிகளைக் கண்டறிந்து, தொழில்நுட்பம், மின்னியல் ஊடகங்கள் மூலம் புதிய பார்வையாளர்களை எட்ட முயற்சி எடுப்போம்.

# திட்டம் செய்யவிருப்பவை

**நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமை திட்டத்தின் முதல் பதிப்பு, 2018 முதல் 2022 வரை சிங்கப்பூரின் மரபுடைமை, அரும்பொருளகத் துறையின் பணிகளை நிர்ணயிக்கும். அதன் சுருக்கமான விவரம்:**

## நம்முடைய இடங்கள்

**A** மரபுடைமை நோக்கங்கள் திட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டு, நம்முடைய மேம்பாட்டுத் தேவைகளுக்கும் மரபுடைமையின் பாதுகாப்புக்கும் இடையில் சமநிலை காணப்படும்.

**B** நம்முடைய மரபுடைமை இடங்களைப் பற்றி பொதுமக்களிடையில் அதிக விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் வளர்க்க, 2019-க்குள் கண்கூடான மரபுடைமை பட்டியல் தயாரிக்கப்படும்.

**C** வரலாற்றுக் கட்டடங்கள், இடங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் ஆய்வும் ஆவணமாக்கலும் வலுவாக்கப்படும்.

**D** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அக்கம்பக்கங்களுக்குப் புத்துயிரளித்து, இவ்விடங்களின் ஈர்ப்பும் இயல்பும் எடுத்துக்காட்டப்படும்.

**E** வெவ்வேறு பேட்டைகள், அக்கம்பக்கங்களின் வரலாற்றையும் மரபுடைமையையும் காட்சிப்படுத்தும் நினைவு நிகழ்ச்சிகளின்மூலம் அன்றாட இடங்களில் மரபுடைமை புகுத்தப்படும்.

**F** தேசிய நினைவுச்சின்னங்களின் உரிமையாளர்களுக்கும் பயன்பாட்டாளர்களுக்கும் ஆதரவும் பொறுப்பும் அளிக்கப்படும்.

**G** நம்முடைய தேசிய நினைவுச்சின்னங்கள், வரலாற்றுக் கட்டடங்கள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு வளர்க்கப்படும்.





# நம்முடைய பொக்கிஷங்கள்

**A** தொடர்ந்து கலைப்பொருட்களைச் சேகரிப்பதன்மூலமும், அவற்றைப் பத்திரப்படுத்தி வைப்பதில் நமது திறனை வலுப்படுத்துவதன்மூலமும், நம்முடைய தேசிய திரட்டு பெருக்கப்பட்டு, பராமரிக்கப்படும்.

**B** பொதுத் துறையின் சிங்கப்பூர் திரட்டுகளுக்குத் தேசிய பதிவேடு தயாரிக்கப்படும்.

**C** நமது தேசிய அரும்பொருளகங்கள், மரபுடைமை அமைப்புகள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, சாங்கி தேவாலய அரும்பொருளகம் சீரமைக்கப்படும்.

**D** நம்முடைய தேசிய அரும்பொருளகங்கள், மரபுடைமை அமைப்புகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் பயன்படுத்துவதிலுள்ள இடையூறுகளை அடையாளம் காண தணிக்கை நடத்தி, அதனைத் தொடர்ந்து அரும்பொருளகங்களிலும் அமைப்புகளிலும் மேம்பாடுகள் செய்யப்படும்.

**E** சிங்கப்பூரரின் கண்ணோட்டத்திலிருந்து காட்சிப்படுத்தப்படும் “சிங்கப்பூரால் தொகுக்கப்பட்ட” கண்காட்சிகள் அதிகமாகத் தயாரிக்கப்பட்டு, படைக்கப்படும்.

**F** தேசிய அரும்பொருளகங்களிலும் மரபுடைமை அமைப்புகளிலும் துடிப்பான, பயன்மிக்க ஆய்வு கலாசாரம் வளர்க்கப்படும்.

**G** அரும்பொருளகங்களுக்கும் மரபுடைமை அமைப்புகளுக்கும் பள்ளிகள் மேற்கொள்ளும் வருகைகளை மேம்படுத்துவதன்மூலம், நமது இளையரிடையில் மரபுடைமை ஆர்வம் வளர்க்கப்படும்.

**H** தற்போதைய சட்டங்களை மறுஆய்வு செய்து, புதைபொருள் பணிகளுக்குச் சட்டமைப்பு வகுத்து, உள்ளூர் திறனை வளர்த்து புதைபொருள் மரபுடைமை பாதுகாக்கப்படும்.

**I** நம் நாட்டு வரலாற்றின் முக்கிய மைல்கற்கள் கொண்டாடப்பட்டு, நம் முன்னோடிகளின் முயற்சிகள் நினைவுகூரப்படும்.





# நம்முடைய கலாசாரங்கள்

- **A** கண்கூடற்ற கலாசார மரபுடைமையின் பாதுகாப்புக்கான யுனெஸ்கோ 2003 ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்.
- **B** நமது பன்மயமான கண்கூடற்ற கலாசார மரபுடைமை பற்றி பொதுமக்களிடையில் விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் வளர்க்க 2019-க்குள் கண்கூடற்ற கலாசார மரபுடைமை பட்டியல் தயாரிக்கப்படும்.
- **C** கண்கூடற்ற கலாசார மரபுடைமை பற்றிய ஆய்வும் ஆவணமாக்கலும் வலுவாக்கப்படும்.
- **D** கண்கூடற்ற கலாசார மரபுடைமையைக் கட்டிக்காப்பவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் திட்டம் 2019-க்குள் அறிமுகமாக்கப்படும்.
- **E** நமது விழாக்கள், கண்காட்சிகள், திட்டங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதன்மூலம், நமது கண்கூடற்ற கலாசார மரபுடைமையைப் பரப்பும் முயற்சிகள் மேம்படுத்தப்படும்.
- **F** சிங்கப்பூரின் கண்கூடற்ற கலாசார மரபுடைமையை மேன்மேலும் பாதுகாக்கவும் பரப்பவும் தேசிய மரபுடைமை கழகச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படும்.


# நம்முடைய சமூகங்கள்


- **A** சமூகப் பங்காளர்களுக்கு மானியங்களும் பயிற்சியும் அளிப்பதன்மூலம் அடித்தள முனைப்புகளுக்குக் கூடுதல் ஆதரவளிக்கப்படும்.
- **B** பல்வேறு சமூகங்களின் மரபுடைமையையும் கலாசாரங்களையும் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளின்மூலம் பல்வேறு சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வு வளர்க்கப்படும்.
- **C** பல்வேறு சமூகங்களுக்குச் சேவை வழங்கி, மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட சமுதாயத்தின் பற்பல பிரிவினரையும் எட்ட முயற்சி எடுக்கப்படும்.
- **D** தொழில்நுட்பத்தின்மூலம் மக்களை எட்டி, இணையத்தில் புதிய மரபுடைமை தகவல்களை வெளியிடுவதன்வழி, நமது மரபுடைமையைப் பற்றி அதிகமானோர் விவரமறிய வழிவகுக்கப்படும்.
- **E** கலாசாரக் கொடையும் தொண்டூழியச் சேவையும் அதிகமாக ஊக்குவிக்கப்படும்.











நம்முடைய சிங்கப்பூர் மரபுடைமைத் திட்டத்தை உருவாக்க உதவிய எங்கள் பங்காளிகள், பங்குதாரரர்கள், முகமைகள் மற்றும் பொதுமக்களுக்கு நாங்கள் நன்றி கூற விரும்புகிறோம்.







